# 8 இறை பணிக்கான அழைப்பு

**இயேசுவின் போதனையைக் கேட்டு, அவரைப் பின்தொடர்ந்து, அவருடன் பழகி, அனேகர் அவருடைய சீடத்துவத்தில் பங்காளர் களாக இருந்தார்கள். அவர்களுள் பன்னிருவரை இயேசு தெரிவு செய்து திருத்தூதர் என்று அழைத்தார். அவர்களுடன் இன்னும் எழுபதுபேரை திருத்தூது பணிக்கென்றும் தெரிவுசெய்தார். இவ் வாறு இயேசு சீடர்களைத் தெரிவுசெய்ததை இங்கு கற்போம்.**

**லூக்கா** 5:1-11, 6:12-16, 9:1-6, 10:1-12, 17, 20

நாசரேத்து தொழுகைக் கூடத்தில் இயேசு தனது பணிபற்றி முன்வைத்த அறிக்கையின்படி செயல்படுவதற்கு சிலரைத் தெரிவுசெய்தார். இயேசு காண்பித்த வழியில் பணி ஆற்றுவதற்கும், இயேசுவின் பணியைப் பரவச் செய்வதற்கும் இறை அழைப்பைப் பெற்றவர்களின் பிரதிச்செயல்கள் சிலவற்றை நாம் பார்ப்போம்.

## பணியின் பரம்பலுக்காக முதல் சீடரை அழைத்தல் (லூக்கா 5:1-11)

இயேசு கெனசரேத்து ஏரிக்கரையில் (கலிலேயாக் கடல் அல்லது திபேரியாக் கடல் என்றும் இது அழைக்கப்படும், இது 13 மைல் நீளமும் 8 மைல் அகலமும் கடல் மட்டத்தில் இருந்து 680 அடி கீழே உள்ளது) நின்று கொண்டு இருந்தபோது திரளான மக்கள் இறைவார்த்தையைக் கேட்பதற்கு அவரை நெருக்கிக் கொண்டு இருந்தனர். ஏரிக்கரையில் நின்றுகொண்டிருந்த இரு படகுகளுள் ஒன்றில் இயேசு ஏறி, அமர்ந்து மக்கள் கூட்டத்துக்கு கற்பித்தார். மீன் பிடித்து வலையை அலசிக் கொண்டிருந்த அந்தப் படகின் சொந்தக்காரனான சீமோனை நோக்கி ''ஆழத்திற்கு தள்ளிக்கொண்டுபோய், மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்'' என்றார். அதற்கு சீமோன், ''ஐயா, இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டு உழைத்தும் ஒன்றும் கிடைக்கவில்லை ஆயினும் உமது சொற்படியே வலைகளைப் போடுகிறேன்'' என்றார். இயேசுவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்த சீமோன் வலையை ஆழத்தில் போட்டு, பெருந்திரளான மீன்களைப் பிடித்தார். இருபடகுகளும் நிறைந்து மூழ்கும் அளவிற்கு மீன்களைப் பிடித்த சீமோன், இயேசுவின் கால்களில் விழுந்து, ''ஆண்டவரே, நான்பாவி, நீர் என்னைவிட்டுப் போய்விடும்'' என்றார். சீமோன் பேதுருவுக்கோ பெரும் சவால் ஒன்று காத்திருந்தது. ''அஞ்சாதே இன்று முதல் நீ மனிதரைப் பிடிப்பவர் ஆவாய்'' என்று கூறி, இயேசு அவரை தனது பணிக்காக அழைத்தார். சீமோன் பேதுரு,

அவருடைய பங்காளியான செபதேயுவின் மக்கள் யாக்கோபும் யோவானும் படகுகளை கரையில் சேர்த்த பின்னர் அனைத்தையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின் பற்றினார்கள்.

இந்த சம்பவத்தில் இருந்து சீமோன் பேதுருவைக் குறித்து நாம் பின்வரும் விடயங்களை அறிந்து கொள்ளலாம்:

1. மீன் பிடித்தலில் பேதுரு அனுபவம் மிகுந்தவராக இருந்தாலும் இயேசுவின் வேண்டுகோளுக்கு உடனடியாக செவிசாய்த்தார்.
2. இயேசுவின் பரிசுத்த தன்மையையும் இறைவல்லமையையும் இனம் கண்டதுடன் தனது பாவதன்மையையும் உணர்ந்தார்.
3. தனது வாழ்வின் இலக்கை மாற்றி, இயேசு கொடுத்த புதிய இலக்கை ஏற்றுக்கொண்டார்.

**பன்னிருவரைத் தேர்ந்தெடுத்தல்**
**(லூக்கா 6:1216)**

இயேசு தமது சீடர்களுள் பன்னிருவரை சிறப்புப் பணிக்கென தெரிவு செய்வதற்கு முன்னர் இரவெல்லாம் தனித்திருந்து ஒரு மலையில் கடவுளிடம் வேண்டுதல் செய்தார். விடிந்ததும் தமது சீடர்களை தம்மிடம் அழைத்து, அவர்களுள் பன்னிருவரைத் தெரிவுசெய்து அவர்களுக்கு திருத்தூதர் என்று பெயரிட்டார். அவர்களின் விபரமாவது, பேதுரு என்று இயேசு பெயரிட்ட சீமோன் - கேபா என்றும் அழைக்கப்பட்டார். மீனவரான இவர் திருச்சபையின் முதல் தலைவராயினார்.

| திருத்தூதர் | சிறப்புக் குறிப்பு |
|---|---|
| சீமோன் | பேதுரு என்று பெயர் சூட்டப்பட்டார். கேபா என்றும் அழைக்கப்பட்டார். திருச்சபையில் முதல் தலைவரானார். சீடர்கள் மத்தியில் முதன்மை வகித்தவர் |
| அந்திரேயா | சீமோனின் சகோதரன். யோவானின் சீடராக இருந்தவர், மீனவராயிருந்தார். |
| யோவான் | செபதேயுவின் மகன் யாக்கோபின் சகோதரன் இடி முழக்கத்தின் மக்கள் என்ற பட்டப்பெயர் கொண்டவர், மீனவராயிருந்தார். |
| யாக்கோபு | செபதேயுவின் மகன் யோவானின் சகோதரன் இடி முழக்கத்தின் மக்கள் என்ற பட்டப்பெயர் கொண்டவர், மீனவராயிருந்தார். |
| பிலிப்பு | கிரேக்கப் பெயர். |
| பார்த்தலமேயு | நாத்தான்வேல் என்றும் அழைக்கப்பட்டார். அரசபரம்ப ரையில் இருந்து வந்தவர் என்று சிலர்நம்புகிறார்கள். |
| மத்தேயு | லேவி என்று அழைக்கப்பட்டார் வரிதண்டுபவரா யிருந்தார். |
| தோமா | இயேசுவின் உயிர்ப்பை முதலில் சந்தேகித்து பின் உறுதி செய்து நம்பினார். |
| யாக்கோபு | அல்பேயுவின் மகன். |
| சீமோன் | தீவிரவாதி என்னப்பட்டவர் உரோம ஆட்சிக்கு எதிராக போராடியவர். |
| யூதா | யாக்கோபின் மகன். |
| யூதாசு இஸ்ரிகாரியோத்து | துரோகியாக மாறியவர். |

இயேசு தன்னோடு சேர்ந்து பணியாற்றுவதற்காக வெவ்வேறு சமூகப் பின்னணியிலிருந்து பன்னிரு திருத்தூதர்களைத் தெரிவு செய்திருந்ததை நாம் இங்கு கண்டு கொள்ளலாம். இந்த பன்னிருவரைத் தவிர வேறும் எழுபத்திரண்டு சீடர்களைத் தெரிவுசெய்து பணிக்கு அனுப்பினார். (லூக்கா 10:1-12) இவர்களைத் தவிர வேறும் பல சீடர்கள் இயேசுவுக்கு இருந்ததாக லூக்கா 8:1-3, 24:13 ஆகிய பகுதிகளில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

### பணிக்கு அனுப்புதல்

இயேசு பன்னிருவரையும் ஒன்றாக அழைத்து, பணிக்கான அறிவுரைகளையும் அதிகாரத்தையும் கொடுத்து அனுப்பினார்.

### அவ்விரு பணிப் பயணங்கள்

| சீடர்கள் 12 (லூக்கா 9:1-6) | சீடர்கள் 70 (லூக்கா 10:1-12) |
|---|---|
| • பணியின்போது எடுத்துச்செல்லக் கூடாதவை (கைத்தடி, பை, உணவு, பணம், ஒன்றுக்கு மேற்பட்ட அங்கி)<br>• எளிமையான வாழ்வு<br>• நற்செய்தியை ஏற்றுக்கொள்வோருடன் தங்கியிருத்தல்<br>• ஏற்றுக்கொள்ளாதவர்களிடம் இருந்து, கால்தூசியை உதறிவிட்டு புறப்பட்டுச் செல்லுதல். | • இருவர் இருவராக செல்லுதல்<br>• இயேசு போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் அனுப்புதல்<br>• எடுத்துச் செல்லக் கூடாதவை (பணப்பை, வேறும் பை, மிதியடி)<br>• ஏற்றுக்கொள்வோருடன் தங்குதல்<br>• ஏற்றுக்கொள்ளாதோருக்கு எதிராக காலடி தூசியை உதறிவிடல் |
| கொடுக்கப்பட்ட பொறுப்பு<br>• பேய்களையெல்லாம் அடக்கவும் பிணிகளைப் போக்கவும் அதிகாரம் பெற்றிருத்தல்<br>• பிணிதீர்தல்<br>• இறையரசை அறிவித்தல் | கொடுக்கப்பட்ட பொறுப்பு<br>• வேலையாட்களை அனுப்பும்படி மன்றாடுதல்<br>• வீடுகளுக்கு அமைதியை வாழ்த்தாகக் கூறுதல்<br>• உடல் நலம் குன்றியோரை குணமாக்குதல்<br>• இறையாட்சி நெருங்கிவிட்டது என்று அறிவித்தல் |

**இவ்விரு பயணங்களில் இருந்தும் நற்செய்தி பரப்புப் பணி தொடர்பாக நாம் கற்றுக்கொள்ளக்கூடியவை:**

1. காலம் தாழ்த்தாமல் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும்.
2. ''ஓநாய்களிடையே அனுப்புகிறேன்'' என்பது நற்செய்திப் பணியின் போது பெரும் சவால்களைச் சந்திக்கநேரிடும் என்பது.
3. பணியாற்றுபவர்கள் எளிமையான வாழ்வை வாழ்வதுடன் இறை நம்பிக்கை மிகுந்தோராக இருக்கவேண்டும்.
4. இந்த சீடத்துவம் விலைமதிக்க முடியாததொன்று, மிகவும் கடினமானது, மன்றாடலுடனும் திட்டமிடலும் தேவையானது. (இயேசுவிடம் இருந்து இவற்றைக் கற்ற சீடர்கள் இயேசுவின் மரணத்தின் பின் தமது பணியில் இதே சவால்களை சந்தித்து வெற்றி கொண்டார்கள்).
5. நற்செய்திப் பணியில் அமைதியின் செய்தி (சமாதானத்தின் செய்தி) இணைந்துள்ளது.
6. எழுபத்திரண்டுபேர் இவ்விருவராக அனுப்பப்பட்டதன் மூலம் பணியில் காணப்பட வேண்டிய சகோதரத்துவம், ஒன்றிணைந்து பணியாற்றல், அதன் மூலம் நற்செய்திப்பணி சிறப்பாக மேற்கொள்ளப்படல் ஆகியவற்றைக் காணலாம்.
7. நற்செய்திப் பணியின் பலன் இறைவனுக்கு சொந்தமானது.
8. மன்றாடல் நற்செய்திப் பணிக்கு இன்றி அமையாதது.

***நற்செய்திப் பயணங்களின் பலன்*** (**லூக்கா** 9:6, 10-17, 20)

1. பல இடங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது
2. கடவுளின் பெயரால் பேய்கள் விரட்டப்பட்டன
3. கடவுளின் பெயரால் நோய்கள் குணமாக்கப்பட்டன

சீடர்கள் தம்மால் இவ்வாறானவற்றை செய்யக்கூடியதாக இருந்ததையிட்டு மகிழ்வுகொள்ளாது, அவர்களுடைய பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருப்பதால் மகிழவேண்டும்.

### செயற்பாடு

1. இயேசு தம்முடைய சீடர்களை நற்செய்திப் பணிக்காக அனுப்பும் போது கொடுத்த அறிவுரைகளுள் ஐந்தைப் பட்டியல்படுத்தி, அவை ஒவ்வொன்றினதும் முக்கியத்துவத்தை நீர் எவ்வாறு பார்க்கின்றீர் என்பதை எழுதவும்.

2. சுயவிருப்பத்தினால் இறை பணிக்கு முன்வருவோருடைய பணி எவ்வாறு அமைய வேண்டும் என்பதை விவரித்து எழுதுக.